**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

***15th டிசம்பர் / December 2024 ஞா யிறு ஆராதனை***

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | ***மிஸ். எபினா***<br>Miss. Ebina |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | ***பாடகர் குழு***<br>Choir |
| **ஜெபம்**<br>*Prayer* | ***மிஸ். எபினா***<br>Miss. Ebina |

***மூன்றாம் ஞாயிறு: Lighting of Advent 3rd Candle***
***மகிழ்ச்சி பிரகடனம்***
***Proclamation of Joy***

## ***லூக்கா 1:32-33***

*32. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.*
*33. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.*

| | |
|---|---|
| **இரண்டு ஊதா மற்றும் ஒரு இளஞ்சிவப்பு நிற மெழுகுவர்த்தியை கொழுத்தவும்**<br>***(Light up two purple candles and one pink candle):*** | ***மறைதிரு. விஜய் ஜோஸப்***<br>Rev. Vijay Joseph |
| **அந்நேரத்தில் சொல்ல வேண்டியது:** | ***மிஸ். எபினா***<br>Miss. Ebina |

**நம்பிக்கை மற்றும் சமாதானத்தை குறிக்கும் இரண்டு மெழுகுவர்த்திகளோடு மகிழ்ச்சியை குறிக்கம் மெழுகுவர்த்தியை இன்று கொழுத்துகிறோம். நம் இருதயம் அவருடைய வருகையின் மகிழ்ச்சியில் என்றும் நிலைத்திருக்கட்டும்.**

***ஜெபம்:* பிதாவே, உம்முடைய குமாரனின் மூலம் வருகிற நம்பிக்கை மற்றும் சமாதானத்தினால் கிடைக்கப் பெறுகிற மகிழ்ச்சிக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த மகிழ்ச்சியின் காரணராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை பரைசாற்ற கிருபைபுரியும். இயேசுவின் இணையற்ற நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் வல்ல பிதாவே. ஆமேன்**

| | |
|---|---|
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

**கேள்! ஜென்மித்த ராயர்க்கே**

*1. கேள்! ஜென்மித்த ராயர்க்கே*
*விண்ணில் துத்தியம் ஏறுதே;*
*அவர் பாவ நாசகர்,*
*சமாதான காரணர்,*
*மண்ணோர் யாரும் எழுந்து*
*விண்ணோர் போல் கெம்பீரித்து*
*பெத்லெகேமில் கூடுங்கள்,*
*ஜென்ம செய்தி கூறுங்கள்,*
*கேள்! ஜென்மித்த*
*விண்ணில் துத்தியம் ஏறுதே.*

*2. வானோர் போற்றும் கிறிஸ்துவே,*
*லோகம் ஆளும் நாதரே,*
*ஏற்ற காலம் தோன்றினீர்,*
*கன்னியிடம் பிறந்தீர்.*
*வாழ்க, நர தெய்வமே,*
*அருள் அவதாரமே!*
*நீர், இம்மானுவேல், அன்பாய்*
*பாரில் வந்தீர் மாந்தனாய்*

*3. வாழ்க, சாந்த பிரபுவே!*
*வாழ்க, நீதி சூரியனே!*
*மீட்பராக வந்தவர்,*
*ஒளி. ஜீவன் தந்தவர்;*
*மகிமையை வெறுத்து,*
*ஏழைக் கோலம் எடுத்து*
*சாவை வெல்லப் பிறந்தீர்,*
*மறு ஜென்மம் அளித்தீர்.*

| | |
|---|---|
| ✝ ***மாறி மாறி வாசித்தல் 50ம் ஞாயிறு***<br>"சங்கீதம் 145" | ***சபையார் இணைந்து***<br>Congregation |

"கர்த்தர் உண்மை உள்ளவர்"

**Psalter Reading "Psalm 145"**

| | |
|---|---|
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | ***மறைதிரு. விஜய் ஜோஸப்***<br>Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | ***சபையார் இணைந்து***<br>Congregation |

✝ ***காணிக்கை பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

<u>**அதிகாலையில் பாலனைத் தேடி**</u>

**அதிகாலையில் பாலனை தேடி**
**செல்வோம் நாம் யாவரும் கூடி**
**அந்த மாடடையும் குடில் நாடி**
**தெய்வ பாலனை பணிந்திட வாரீர்**

**அதிகாலையில் பாலனை தேடி**
**வாரீர் வாரீர் வாரீர் நாம் செல்வோம்**

*1.அன்னை மரியின் மடி மேலே*
*மன்னன் மகவாகவே தோன்ற*
*விண் தூதர்கள் பாடல்கள் பாட*
*நாம் யாவரும் செல்வோம் வாரீர்*

*2. மந்தை ஆயர்கள் யாவரும் அங்கே*
*அந்த முன்னணை முன்னிலை நின்றே*
*தம் சிந்தை குளிர்ந்திட போற்றி*
*நல் காட்சியை கண்டிடலாமே.*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திரு. மகேஸ்வரன்***
***லூக்கா 1 : 26 - 38***
Scripture Reading — Mr. Mageshwaran
Luke 1 : 26 - 38

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

<u>**பெத்தலையில் பிறந்தவரைப்**</u>

**பெத்தவையில் பிறந்தவரைப்**
**போற்றித்துதி, மனமே – இன்னும்**

*1. சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர் இங்கு*
*தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார்,*

*2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் இங்கு*
*பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார்.*

*3 முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக இங்கு*
*மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே,*

*4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர் இங்கு*
*ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார்.*

*5. இத்தடைவாய் அன்பு வைத்த எம்பெருமானை நாம்*
*எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே.*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***லூக்கா 1 : 30 - 31***
**Luke 1 : 30 - 31**

30. **தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்.**
31. **இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.**

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** / **Indicates Congregation standing**